செ.வெ.எண் : 63 நாள் : 05.02.2018

# புத்திரிக்கை செய்தி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிராம பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் நாட்டுக்கோழிகள் மற்றும் பிறவகை கோழிகளுக்கு கோடை காலங்களில் ஏற்படும் வெள்ளைக் கழிச்சல் நோய் பெரும் பொருளாதார நஷ்டத்தை ஏற்படுத்துகிறது.

கோழிகளுக்கு ஏற்படும் இந்த வெள்ளை கழிச்சல் நோயினை கட்டுப்படுத்த ஒவ்வொரு சனிக்கிழமை அரசு கால்நடை மருந்தகங்களிலும், 15 நாட்கள் ஒருமுறை அரசு மருத்துவ கிளை நிலையத்திலும், கால்நடை பாதுகாப்பு திட்ட முகாமிலும், கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

இதன்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம், ஒவ்வொரு கிராமந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் 09.02.2018 முதல் 22.02.2018 முடிய இருவார கோழி கழிச்சல் தடுப்பூசி முகாம் நடைபெற இருக்கிறது.

எனவே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் கோழிகளை வளர்க்கும் அனைத்து பொது மக்களும், இந்த முகாமில் கலந்து கொண்டு தங்களது கோழிகளுக்கு தவறாமல் தடுப்பூசி போட்டு, கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் காரணமாக ஏற்படும் இறப்பினை தவிர்த்து அதிக இலாபம் ஈட்டி பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இது தொடர்பான விவரங்களுக்கு அருகில் உள்ள கால்நடை நிலையங்களை அணுக மாவட்ட நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

S. Ranjit 2/2

மண்டல இணை இயக்குநர்(கூ/பொ)
கால்நடை பராமரிப்புத்துறை,
காஞ்சிபுரம்.

2018

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.

1.2.18

1/2/18

1/2/18